முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 392/2023

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாள் வா.த.சா.1–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தன் | வயது | : | 31 |
| தந்தை/கணவர் பெயர் | : | செல்வமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நெல்லிக்குப்பத்தில் காய்கறி கடை வைத்துள்ளேன். வாடகை இடத்தில் நான் கடை வைத்துள்ளேன். அந்த இடத்திற்கு மாதம் ரூ.12,000/– வாடகை. என் கடையில் 5 பேர் வேலை செய்கிறார்கள். மாதம் ரூ.50,000/– வரை வருமானம் வரும். ஒரு நாளுக்கு ஒரு ஆளுக்கு ரூ.400/– சம்பளம். அந்த ரூ.50,000/– த்தில் ரூ.25,000/– சம்பளம் என்றால் ஆமாம். நான் 15 வருடங்களாக கடை வைத்துள்ளேன். நான் பி.இ. மெக்கானிக் படித்துள்ளேன். நான் படித்து முடித்து 12 வருடம் ஆகிறது. நான் சி.கே. கல்லூரியில் படித்தேன். எந்த ஆண்டு வரை படித்தேன் என்று நினைவில்லை. வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. வேலை செய்பவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பட்டியல் உள்ளதா என்றால் இல்லை, தினமும் அன்றே கூலி வாங்கி கொள்வார்கள். நான் காய்கறி கடை வைத்திருக்கவில்லை என்பதும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல.

காய்கறி கடை என்பது சிறிய தொழில் என்றால் ஆமாம். அந்த தொழில் செய்வதற்கு அரசில் சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் வைத்துள்ளேன், ஆனால் என் பெயரில் இல்லை என் அப்பா பெயரில் உள்ளது. கிரைய அக்ரிமெண்ட் எந்த தேதியில் போடப்பட்டது என்றால் 28.10.2021 ல் பத்திரம் எழுதப்பட்டது, 19.11.2021 ல் பதிவு செய்யப்பட்டது. பத்திரம் ராகினி என்ற பெயரில் வாங்கினார்கள். எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கினார்கள் என்று எனக்குத் தெரியாது. எத்தனை பக்கங்கள் எழுதினார்கள் என்று தெரியவில்லை. பதிவு செய்வதற்கு முன்பு கிரைய உடன் படிக்கைக்காக 16.11.2021 அன்று 10,85,750/– ரூபாய் பணம் வங்கி மூலம் கொடுத்தேன். பாக்கி தொகையை 24,14,250/– ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன். கிரைய அக்ரிமெண்ட் வங்கியில் அடமானத்தில் இருந்தது. கிரைய உடன் படிக்கை ராகினியை எதிர்த்து நான் தாக்கல் செய்துள்ளேன். 10,85,750/– ரூபாய் நான் ராகினி பெயருக்கு கொடுத்தேனா என்றால் இல்லை, ராகினியின் மகன் சரவணனுக்கு கொடுத்தேன். இந்த வழக்கு சொத்து ராகினிக்கு பாத்தியமானது. வில்லங்கம் பார்த்தேன், ராகினி பெயரில் தான் உள்ளது. சரவணன் பெயருக்கு சொத்து உரிமை இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. சரவணனுக்கும் எனக்கும் இந்த சொத்து சம்பந்தமாக அக்ரிமெண்ட் கிடையாது என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததற்கு எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ராகினிக்கு பணம் கொடுத்தற்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ராகினி பெயரில் வங்கி கணக்கு இல்லை, எனவே அவர் மகன் பெயரில் தான் வங்கி கணக்கு இருந்ததால் போட்டேன். ராகினிக்கு பணம் போட்டதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சரவணனுக்கும் எனக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட முறையில் கணக்கு வழக்கிற்கானது என்பதும்,

இந்த வழக்கிற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதும் சரியல்ல. Ex. A1 கிரைய அக்ரிமெண்ட்டில் 28.10.2021 ல் 35 லட்சம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், நான் சரவணனுக்கு இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக அனுப்பப்பட்டதாக சொல்லும் தேதி 16.11.2021 என்றால் சரிதான். நான் சொல்வது போல் 28.10.2021 தேதியில் ExA1 ல் கண்ட தொகை ரூ.35 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ExA5–MOD ஆனது 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ExA6 ரசீது 19.11.2021 ல் வரவு வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். ExA6 ல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரூ.10 லட்சம் கடன் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். அதனால் Ex.A1 ல் ரூ.10 லட்சம் மட்டும் தான் என்னிடம் கடன் கேட்டார் என்றால் இல்லை, என்னிடம் கடன் கேட்கவில்லை. நான் 35 லட்சம் போட்டு கிரைய அக்ரிமெண்டில் எழுதி கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் தான் ExA1 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த 10 லட்சத்தினை வாங்கிய தேதியிலிருந்து தற்போது வரை அரசு வட்டிப்படி திருப்பி செலுத்த தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு எந்த காலத்திலும் அந்த சொத்தினை விற்க வேண்டும என்ற எண்ணம் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே, அந்த 10 லட்சத்திற்கு எனக்கு வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. ரூ.6 லட்சத்திற்கு மேல் வட்டியாக எனக்கு செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சொத்து வழிகாட்டுதல் மதிப்பு அந்த சமயத்தில் பார்த்தேன், அப்போது சதுரடி ரூ.1500/–க்கு போனது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து நெல்லிக்குப்பம், ரத்தினம் பிள்ளை தெருவில் உள்ளது. 110க்கு 18 –1/4, 2007.5 சதுரடி.

நான் தாக்கல் செய்துள்ள Ex.A7 ல் மதிப்பு சதுரடிக்கு 134 ரூபாய் என்று போட்டுள்ளது என்றால் சரிதான். அதன் படி சொத்து மதிப்பு ரூ.2,69,005/– என்றால் சரியல்ல. ரூபாய் 134 என்பது அரசாங்க மதிப்பு, ரூ.1500 என்று தான் சதுரடி பேசியது. ரூ.1500க்கு சதுரடி பேசியதற்க்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ExA1 நான் கேட்டுக்கொண்டதற்காக தான் ரூ.10 லட்சத்திற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதும், கிரையத்திற்காக ஏற்படுத்தப்படவில்லை என்பதும் சரியல்ல. கிரையத்திற்காக தான் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு சாட்சியாக ராகினியின் கணவரும், மகனும் கையெழுத்து போட்டார்கள். ரூ.10 லட்சத்திற்காக தான் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் அவர்களுக்கு சொத்தினை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விற்க வேண்டி தான் என்னை அணுகினார். பிரதிவாதியை பல முறை சென்று கேட்டேன், எந்த தேதியில் கேட்டேன் என்றால் தினமும் செல்வேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் பிரதிவாதியிடம் சென்று நான் சொத்தினை கிரையம் எழுதி கொடுக்க சொல்லி கேட்டேன் என்றால் இல்லை,அதற்கு முன்பும் கேட்டேன். 2021 லிருந்து தினமும் சென்று கேட்டேன். ராகினிக்கு தாவா சொத்திற்கு எதிரே வேறு ஒரு இடம் உள்ளது. அந்த இடமும் ராகினி பெயரில் தான் உள்ளது. அதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு சரியான வாடகை வீடு அமையவில்லை என்று காலம் கடத்தி வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ஆனால் பிரதிவாதிக்கு எதிரில்ஒரு காலி மனை மட்டும் உள்ளது.

எந்த வீட்டில் வசிக்கிறார்கள் என்று கிரைய அக்ரிமெண்ட் போட்டார்கள் என்றால் கிரைய அக்ரிமெண்ட் விலாசத்தில் தான் குடியிருப்பதாக விலாசமாக அக்ரிமெண்டில் போட்டார்கள். என் தெருவிற்கும் கிழக்கே வர்ஜீர்கான் தெரு உள்ளது என்றால் சரிதான். ரத்தினம்பிள்ளை தெரு என் வீட்டிற்கும் பின்னாடி தெரு. ரத்தினம் பிள்ளை தெருவில் சுமார் 200 வீடுகள் இருக்கும். வர்ஜீர்கான் தெருவில் சுமார் 200 வீடுகள் இருக்கும். இரகசிய ஏற்பாடு குறித்து எனக்கு எந்த தேதியில் தெரிந்தது என்றால் தேதி தெரியாது, இரகசியமாக விற்பதாக டிசம்பர் மாதம் 2022 ஆம் ஆண்டு வேறு நண்பர்கள் மூலம் தெரியவந்தது. யாருக்கு விற்பனை செய்வதாக இருந்தார் என்று குறிப்பிட்டு பெயர் தெரியாது. அவர் வீட்டிலேயே தான் இரகசியமாக பேசிக்கொண்டார்கள். யார் யார் இரகசியமாக பேசினார்கள் என்று தெரியாது. சீனுவாசன் என்பவர் மூலமாக தெரியவந்தது. நான் பணம் கொடுத்து பைசல் செய்ததாக சொல்வது இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. ரூ.10 லட்சம் எனக்கு கடன் வாங்கி அதில் ரூ.6 லட்சம் வட்டியாக செலுத்தியுள்ளார் என்பதாலும் மீதி தொகையையும் கொடுக்க தயாராக உள்ளதாலும் வழக்கில் கோரியுள்ளவாறு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.